# ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2025

1. ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III பதவிகளுக்கான 15 வெற்றிடங்களுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவை கொண்ட பின்வரும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து 2025.11.07 திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**2. ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொது தகைமைகள்;**

2.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2. சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3. விண்ணப்பதாரர் ஊவா மாகாணத்தில் 03 வருட நிரந்தர வதிவை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.4. எந்த ஒரு மதத்தினதும் மத குருவாக பதவி வகிக்கும் எவரும் இந்தத் தேர்வில் அமர்வதற்கு தகுதியற்றவர்களாவார்கள்.

2.5. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

3. **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்;**

3.1. இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். பதவிக்குரிய ஓய்வூதிய முறைதொடர்ப்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல்வேண்டும்.

3.2. பொது நிருவாக சுற்றிக்கை 18/2020 ன் கோட்பாடுகளின் பிரகாரம் விதந்துரைக்கப்பட்ட அரச கரும மொழி தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

3.3. ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற உட்பட்டிருக்க வேண்டும்.

3.4. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் நடைமுறை விதிகள், ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் ஒழுக்காற்று நடைமுறை மற்றும் நிதி விதிக் கோவை, நிதி பிரமாணம், மத்திய அரசாங்கத்தின் மற்றும் மாகாண சபை அரசாங்க சேவையின் பிற விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் இது தொடர்பில் அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

**4. சம்பள அளவுத்திட்டம்;**

4.1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) – III தரத்திற்காக பொது நிருவாக சுற்றறிக்கை 10/2025 ன் MN 3 – 2025 ற்கு ஏற்ப, ரூபா.

52,250 - 10 x 800- 11 x 1190 -10 x 1320 - 10 x1350 – 100,040/- சம்பள அளவுத்திட்டம் உரிதாகுவதோடு மேலே குறிப்படப்பட்டுள்ள சுற்றறிக்கையின் உப ஆவணம் III ற்கு ஏற்ப 2027.01.01 ஆம் திகதி வரை சம்பளம் வழங்கப்படும்.

5. **ஒவ்வொறு பதவிக்குமான வயதெல்லை, கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் போட்டிப் பரீட்சையின் பாடத் திட்டம்.**

| **தொ. இல.** | **பதவி, ஆட்சேர்ப்பு செய்யும் தரம் மற்றும் வயதெல்லை** | **கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள்** | **போட்டிப் பரீட்சையின் பாடத் திட்டம்** |
|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உத்தயோகத்தர் (சிவில்)<br><br>தரம் III<br><br>வயது : 18 வருடங்களுக்கு குறையாத மற்றும் 30 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். | **கல்வித் தகைமைகள்**<br><br>க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம்/விஞ்ஞானம் மற்றும் மேலுமொரு பாடத்தில் திறமை சித்தி பெற்று ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் துறைசார் விடயங்கள் இரண்டுடன் விஞ்ஞானம்/கணிதம்/ தொழில்நுட்பவியல் பாடப்பிரிவிற்கு உரித்தான பாடங்கள் மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (குறித்த பாடங்கள் இணைப்பு 01 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது).<br><br>**தொழில்சார் தகைமைகள்;**<br>`I.மொரடுவை | **1. நுண்ணரிவு பரீட்சை – 1 மணித்தியாலம் – 100 புள்ளிகள்**<br><br>விண்ணப்பதாரரின் மொழித் திறன், எண் திறன், தர்க்கத் திறன், பகுப்பாய்வு மற்றும் தொகுப்புத் திறன் மற்றும் விரைவாக மற்றும் துல்லியமான முடிவுகளை எடுக்கும் திறன் ஆகியவற்றை அளவிட வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் கட்டமைக்கப் பட்ட கட்டுரை வினாக்களை உள்ளடக்கிய வினாப்த்திரமாகும்.<br><br>**2. பொது அறிவு – 03 மணித்தியாளங்கள் – 100 புள்ளிகள்**<br><br>தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பொருளாதார, அரசியல், சமூக தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | பல்கலைக்கழகத்தி னால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT)<br><br>அல்லது<br><br>II. தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளமோ (NDES)<br><br>அல்லது<br><br>III. கல்வி மற்றும் உயர்க் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE)<br><br>அல்லது<br><br>IV.இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா<br><br>அல்லது<br><br>V.இலங்கை பொறியியல் நிறுவன த்தினால் வழங்கப்படும் பொறியி யல் பரீட்சையில் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூரணப்படுத்தியிரு த்தல்.<br><br>அல்லது<br><br>VI. தொழில் துறைக்கான தேசிய தொழில்சார் தகைமை 06 மட்டத்தி ற்கு சமனான தகைமையினை பெற்றிருத்தல். | உள்ளக்கப்பட்ட வினாப்பத்திரமா கும். (பரீட்சையில் சித்தியடைவதற் காக ஒவ்வொரு விடயத்திலும் 40% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்). |

| | | | |
|---|---|---|---|
| | | அல்லது<br><br>VII. உயர் கல்வி அமைச்சின் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நு ட்ப சான்றிதல் வழங்கும் நிறுவனங் களுடன் கலந்தாலோசித்து அவர்க ளின் கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நு ட்ப தகைமைகளுக்கு சகல விதத்தி லும் சமனானது என மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள் ளப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல். | |

## 6. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை;

6.1. வெற்றிட எண்ணிக்கையினை விட அதிகமான எண்ணிக்கையிலான விண்ணப்ப படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எழுத்து மூல பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6.2. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்படுகின்றமை விண்ணப்பதாரி குறித்த பதவிக்காக தகைமை பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஒப்புதலாக கருதப்படாது.

6.3. போட்டிப் பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சை பிரிவின் ஊடாக நடாத்தப்படும். போட்டிப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தினால் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழு பரீட்சைகும் ஒமொழி மூலத்தினால் மாத்திரமே தோற்ற வேண்டும். விண்ணப்ப பத்திரங்களை சமார்ப்பித்த பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

6.4. பரீட்சையில் தேர்ச்சியடைவதற்காக ஒரு வினாப்பத்திரத்தில் பெற்றுக்கொள்ளக் வேண்டிய குறைந்தப்பட்ச புள்ளிகள் 40% ஆகும். பரீட்சை திகதியன்று பரீட்சகரின் ஆள் அடையாளத்தினை சான்றுபடுத்துவதற்காக ஆட் பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டதேசிய அடையாள அட்டை, செல்லுப்படியாகும்

கடவச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ் ஆவணங்கள் தவிர்ந்த வேறு ஆவணங்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பங்களை முன்வைத்தல்;**

7.1. இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரர்கள் https://exams.psc.up.gov.lk/ என்ற இணைய இணைப்பு வழியாக நிகழ்நிலை விண்ணப்ப அணுலை அணுகி 2025.11.07 அன்று **இரவு 11.59 மணிக்குள்** அல்லது அதற்கு முன் பரீட்சைக்கான நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து முறைமைக்கு சமர்ப்பித்த (Submit) பிறகு விண்ணப்பத்தின் மென் பிரதியை (மெனுவில் Applicationனை அணுகவும்) பதிவிறக்கம் செய்துக்கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் வன் பிரதியில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை ஒட்டி, கையொப்பத்தை சான்றளித்து, 2025.11.14 அன்று அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, எண் 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்கராவை, பதுளை"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உரையின் இடது மேல் மூளையில் **"ஊவா மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2025"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

7.2. தற்போது மாகாண அரசாங்க சேவையில் அல்லது மத்திய அரசாங்கத்தில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்ப படிவங்களை திணைக்கள தலைவர் ஊடாக சமர்ப்பிக்கவேண்டும்.

7.3. அதேபோல, நிகழ்நிலை முறைமையின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் எந்தவொறு தகவல்களையும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எனவே, ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தகவல்களை அவதானமாக சரிபார்ப்பது முக்கியமாகும். முறையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் முழுமையற்ற அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அனைத்து விண்ணப்பங்களும் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது நன்மை பயப்பதானதாக இருக்கும்.

**குறிப்பு – விண்ணப்ப படிவங்ளை ஏற்றுக்கொள்வதற்காக நிகழ்நிலை முறைமை** 2025.10.27 **ஆம் திகதி மு.ப. 9.00 திறக்கடும் அதே நேரம்** 2025.11.07 **ஆம் திகதி பி.ப. 11.59 மணிக்கு மூடப்படும்.**

**8. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;**

8.1. **மாகாண அரசாங்க சேவை / மத்திய அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தனை சான்றுப்படுத்தல்:**

விண்ணப்பதாரரின் கையொப்பம் விண்ணப்பப் படிவத்திலும் பரீட்சை அனுமதி அட்டையிலும் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை தனது நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

8.2. **அரசாங்க சேவையில் இல்லாத விண்ணப்பதாரர்களின் கையொப்பத்தினை சான்றுப்படுத்தல்;**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசு பாடசலையின் அதிபர் / பிரதேச கிராம அலுவலர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையர் / பொதுச் சட்டத்தரணி / முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட மேற்பார்வை அதிகாரி / பொலிஸ் சேவையில் வர்த்தமானி பதவியை வகிக்கும் அதிகாரி / அரசு அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியை வகிக்கும் நிரந்தர நிரைவேற்று தர அதிகாரி ஆகியோரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

**9. பரீட்சை மற்றும் நிருவாக கட்டணங்கள்;**

பரீட்சை கட்டணம் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூ. 1250/- ஆகும். இக்கட்டணத்தனை ஊவா மாகாணத்தின் பிரதான செயலாளரின் வருமான தலைப்பு 20.03.02.13 ற்கு வரவு வைக்கப்பட தக்கதாக ஊவா மாகாணத்தின் காணப்படும் எந்தவொறு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பணமாக செலுத்தி விண்ணப்பதாரரின் பேரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப் படிவத்தில் பரிந்துரைக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியது கட்டாயமாணதாகுவதோடு, எதிர்கால பயன் கருதி பற்றுச்சீட்டின் நிகழ்ப்பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயன்தக்கதாகும். ஊவா மாகாணத்தின் பிரசே செயலாளர் அலுவலகத்தில் பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், காசு கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படாத அதேவேலை அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணமானது எந்தவொறு காரணத்திற்காகவும் திரும்பப் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

**10. பரீட்சை நடைமுறை மற்றும் போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்;**

10.1. ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னதாக பரீட்சை கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணபதாரிகளுக்கு ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதி அட்டை விநியோகிக்கப்படும். விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளான 2025.11.07 ஆம் திகதியன்று இவ்வறிவித்தலின் சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள, வெற்றிட எண்ணிக்கையை விட அதிகமாக விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டிருக்குமானால் மாத்திரம் அவ்விண்ணப்பதாரிகளை சான்றிதழ் பரிசீலிகப்படாமல் திறந்த போட்டி பரீட்சைக்கு அமர்த்தப்படுவர்.

10.2. பரீட்சை நடைபெறுவதற்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்தாக அன்மதி அட்டைகள் மின்னஞ்சல் (E-mail) மூலம் அனுப்பப்படுவதோடு, பரீடசைக்காக விண்ணப்பிக்கும் போது மின்னஞ்சல் முகவரியினை சரியாக குறிப்பிடுட்டிருத்தல் வேண்டும். பரீட்சை திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்னதாக அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அது தொடர்ப்பில் ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விண்ணப்படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி, பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியுடன் அனுமதி அட்டையினை அனுப்புவதற்காக வட்ஸ்அப் (WhatsApp) இலக்கம் ஒன்றினை குறிப்பிட்டு கோரிக்கை ஒன்றினை முன்வைக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக https://exams.psc.up.gov.lk/admission/ இணைப்பின் ஊடாக பரீட்சை அட்டையினை பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்படும். அதற்கேற்ப இணையதளத்திலிருந்து அனுமதி அட்டையினை பதிவிறக்கம்செய்து பரிசீலித்து திருத்தங்கள் இருந்தால் குறித்த நிரையில் திருத்தப்பட வேண்டிய விதத்தினை சரியாக குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் கையொப்பம் இடபட்டிருத்தல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் எனப் பொருள்படாது.

10.3. இந்தப் போட்டிப் பரீட்சையானது பதுளை மற்றும் மொனராகலை ஆகிய நகரங்களில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து எந்த நகரங்களில் பரீட்சையினை நடாத்துவது என்பதை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

10.4. பரீட்சார்த்திகள் தமக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு அமர வேண்டும். பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவார்கள்.

அவ்விதிகளை மீறப்பட்டுருந்தால், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்

10.5. பரீட்சை திகதியன்று பரீட்சகரின் ஆள் அடையாளத்தினை சான்றுபடுத்துவதற்காக ஆட் பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்டதேசிய அடையாள அட்டை, செல்லுப்படியாகும் கடவச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ் ஆவணங்கள் தவிர்ந்த வேறு ஆவணங்கள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10.6. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை விநியோகிக்கப்படுதலானது விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் என கருதப்படமாட்டாது. நேர்முக பரீட்சை சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யப்படவில்லை என தெரியவந்தால் அவ்விண்ணப்பதாரி நியமனம் வழங்கப்படுவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

10.7. இப்போட்டிப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழு பரீட்சைக்குமே ஒரே மொழி மூலத்தில் தோற்ற வேண்டும். விண்ணப்ப படிவத்தினை சமர்ப்பித்த பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**11. போலியான தகவல்களை வழங்குதல்:**

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக யாதாயினும் விண்ணப்பதாரர் ஒருவர் தகைமையற்றவர் என தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைப்பெறும் சந்தர்ப்பத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவையிட்கு நியமிக்கப்பட்ட பின்னரான சந்தர்ப்பத்தில் விண்ணபதாரர் சமர்ப்பித்த தகவல் போலியானது என அல்லது நன்கு அறிந்தும் போலியான தகவல்ளை சமர்ப்பித்துள்ளார் என அல்லது வேண்டும் என்றே உண்மையான தகவல்களை மறைத்துள்ளார் என தெரியவந்தால் அவரது பதவி வரிதாக்கப்படுவதற்கு இடமுண்டு.

**12.** இப்பதவிக்காக நியமனம் வழங்குதல் / வழங்காமல் இருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையில் ஒரு பகுதியினை பூரணப்படுத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பில் அல்லது இது தொடர்பிலான விடயம் சார்ந்த இறுதி முடிவு ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். அதேபோல இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொறு விடயம் தொடர்பாக விளக்கமளித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண கௌரவ ஆளுநரின்

அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

**13.** சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்டும் இவ்வறிவித்தலின் மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமாயின் அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலிற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14. இது தொடர்பிலான மேலதிக விடயங்களை அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலக தொலைப்பேசி இலக்கம் 0552222400, 0552231460 இற்கு அழைப்பினை மேற்கொள்ளுவதன் ஊடாக பெற்றுக்கொள்ள இயலும்.

(எச்.எம். ஜீவன்த ஹேரத்)
செயலாளர் (ப.க.)
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை
ஆணைக்குழு

2025.10. திகதி,
பதுளை
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து.